சென்னை முகாம் அலுவலகத்தில், நேற்று முன்தினம் (30.05.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை உலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த தமிழ்நாட்டைச் சார்ந்த என். முத் தமிழ்செல்வி, ராஜசேகர் பச்சை ஆகியோர் சந்தித்து வாழ்த்துபெற்றனர். உடன் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ஆகியோர் உள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, மேல்மாந்தை, கீழ விளாத்திகுளம் ஊராட்சி ஆண்டிரெட்டியா புரம் ஓடை மற்றும் பிள்ளையார்நத்தம் ஊராட்சி கே.குமரெட்டையாபுரம் ஆகிய கிராமங்களில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து புதிதாக கட்டப்பட்டுள்ள பயணிகள் நிழற்குடை மற்றும் எட்டயாபுரம் 3வது வார்டு, எட்டயாபுரம் 5வது வார்டு ஆகிய பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடங்களை பயன்பாட்டிற்கு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பின ரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. திறந்து வைத்தார். உடன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பெ.கீதா ஜீவன், சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன், மாவட்ட ஆட்சியர் செந்தில்ராஜ், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, கூடுதல் ஆட்சியர் சுபம் தாக்கரே ஞானதேவ்ராவ், மாநில நெச வாளர் அணி துணை செயலாளர் ஜெயக்குமார், ஒன்றிய செயலாளர்கள் சின்ன மாரிமுத்து, மும்மூர்த்தி செல்வராஜ், இராதாகிருஷ்ணன், நவநீதகண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

இந்தியாவில் முதல்முறையாக தமிழ்நாட்டில் ரூ.128 கோடியில் மருத்துவ உபகரணங்கள் தயாரிப்பு தொழிற்சாலை!

ஜப்பான் நாட்டின் 'ஓம்ரான் ஹெல்த் கேர்' நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது!

டோக்கியோ, ஜீன் 1 -

ஜப்பான் நாட்டின் முன்னணி நிறுவன மான ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனம் இந் தியாவில் முதல்முறையாக தமிழ்நாட்டில் ரூ.128 கோடி முதலீட் டில் மருத்துவ உப கரணங்கள் தயாரிப்பு தொழிற்சாலை நிறு விட புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

அதன் விபரம் வருமாறு :-

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறை பய ணம் மேற்கொண்டுள்ளார்.

23.5.2023 அன்று சிங்கப்பூர் சென்ற முதலமைச்சர் அவர்கள், சிங்கப் பூர் மற்றும் ஜப்பான் நாட்டின் உள்ள ஒசா காவில் தனது அரசு முறைப் பயணத்தை முடித்துக் கொண்டு தற்போது டோக்கியோ வில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரு கிறார்.

இப்பயணங்களின்போது முதலமைச் சர் அவர்கள், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளின் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு, பல்வேறு நிறுவனங் களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொண்டார்.

ஜப்பான் நாட்டின் முன்னணி நிறு வனமான ஓம்ரான் ஹேல்த்கேர் நிறு வனம் இந்தியாவில் முதல் முறையாக தமிழ்நாட்டில் புதிய தொழிற்சா லையை நிறுவிட முதலமைச்சர் அவர் கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஓம்ரான் (OMRON) நிறுவனம், தொழில்துறை ஆட்டோமேஷன், ஹெல்த்கேர், மின் னணு பாகங்கள் தயாரிப்பு களில் ஈடுபட்டு வருகிறது. தற்போது, ஓம்ரான் நிறுவனம் சுமார் 120 நாடுகளுக்கு தனது தயாரிப்பு கள் மற்றும் சேவைகளை வழங்கி வரு கிறது.

ஓம்ரான் கார்ப்பரேஷனின் ஒரு பிரி வான ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனம், டிஜிட்டல் இரத்த அழுத்த மானிட்டர்கள், சுவாச சிகிச்சைக்கான நெபுலைசர்கள் ஆகியவற்றைத் தயாரித்து விற்பனை செய்வதில் உலகளவில் முன்னணி நிறு வனமாக விளங்கி வருகிறது.

மேலும், இந்நிறுவனம், குறைந்த அதிர்வெண் வலி சிகிச்சை உபகரணங் கள் (lowfrequency pain therapy equipment), மின்னணு வெப்பமானி கள், உடல் அமைப்பு மானிட்டர்கள் (body composition monitors) உற்பத்தியி லும் ஈடுபட்டு வருகிறது.

உலகின் முன்னணி நிறுவனம்!

இந்நிறுவனம் தமிழ்நாட்டில் மருத் துவ உபகரணங்களைத் தயாரிக்கும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (30.5.2023) மாலை டோக்கியோவில், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத் திற்கும், ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனத் திற்கும் இடையே, 128 கோடி ரூபாய் முதலீட்டில் தானியங்கி இரத்த அழுத்த மானிட்டர்களுக்கான உற்பத்தி தொழிற் சாலையை நிறுவுவதற்கான புரிந்து ணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம், உலகின் முன்னணி நிறுவனமான ஜப் பான் நாட்டைச் சேர்ந்த ஓம்ரான் ஹேல்த் கேர் நிறுவனம் இந்தியாவின் முதல் மருத்துவ உபகரணங் கள் உற்பத்தி தொழிற்சாலையை தமிழ்நாட்டில் தொடங்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:-

ஓம்ரான் நிறுவனத்தின் முதலீடு, தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு உகந்த சூழ்நிலை மீதான தங்களின் நம் பிக்கையை மட்டுமின்றி, வெற்றிகர மான அதன் மருத்துவக் கட்டமைப்பின் மீதான உங்கள் நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

தமிழ்நாடு சுகாதாரத்திற்கு அதிக முக் கியத்துவம் அளித்து வருகிறது. எளிதில் கிடைக்கக்கூடிய தரமான மருத்துவச் சேவைகளை தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. மருத்துவத் துறைக்கான உற் பத்தித் தொழிலைத் தொடங்குவதன் மூலம் எங்கள் மாநிலத்தின் மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துவதில் ஓம் ரான் நிறுவனம் முக்கியப் பங்காற்ற இருக்கிறது. தங்களது முயற்சிகள் சிறப் பாக அமைய வாழ்த்துகள், நன்றி.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியில், தொழில், முத லீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலை மைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஓம்ரான் ஹேல்த்கேர் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலு வலர் திருமதி அயுமு ஒகடா (Ayumu Okada), செயல் அலுவலர் திருமதி கசுகோ குரியாமா (Kazuko Kuriyama), ஓம்ரான் ஹேல்த்கேர் தயாரிப்பு நிறுவனம் (வியட் நாம்) தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் டாகுடோ இவானகா (Mr. Takuto Iwanaka) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்ட னர்.

எவரெஸ்ட் சிகரம் ஏறி சாதனை படைத்த

முத்தமிழ்ச் செல்வி - அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் வாழ்த்து!

மேலும் சாதனைகள் படைக்க வாழ்த்தினார்!

சென்னை, ஜூன் 1 -

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட் டுத்துறைஅமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்களை உலகிலேயே உயரமான எவ ரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த தமிழ் நாட்டைச் சார்ந்த திருமதி என். முத்தமிழ்செல்வி மற் றும் ராஜசேகர் பச்சை ஆகி யோர் நேற்று சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட் டுத்துறை அமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்களை உலகிலேயே உயரமான எவ ரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த தமிழ் நாட்டைச் சார்ந்த திருமதி என். முத்தமிழ்செல்வி மற் றும் ராஜசேகர் பச்சை ஆகி யோர் நேற்று (30.05.2023) சென்னை முகாம் அலுவல கத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட் டுத்துறை அமைச்சர் அவர் கள் திருமதி என். முத்தமிழ்செல்வி மற்றும் ராஜசேகர் பச்சை ஆகியோ ரைப் பாராட்டி, இது போன்று மென்மேலும் பல சாதனைகளை படைத்திட வாழ்த்து தெரிவித்தார். மேலும், விளையாட்டுத் துறையில் இதுபோன்று ஆர் வமுள்ள இளைஞர்களுக்கு முன்னுதாரணமாகவும், ஊக்கம் அளிக்கும் வகையி லும் விளங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்டம், ஜோகில்பட்டியைச் சார்ந்த திருமதி முத்தமிழ்செல்வி அவர்கள் எவரெஸ்ட் சிகரத் தில் ஏறி சாதனை படைத்த தமிழ்நாட்டைச் சார்ந்த முதல் பெண் ஆவார். மே 23ஆம் தேதி மவுண்ட் எவ ரெஸ்ட் பகுதியை வெற்றிக ரமாக அடைந்தார்.

திருமதி முத்தமிழ்ச் செல்வி அவர்களுக்கு தமிழ் நாடு அரசு சார்பில் நிதி யுத வியாக ரூபாய் 10 இலட்சத் திற்கான காசோலை இளை ஞர் நலன் மற்றும் விளை யாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 28.03.2023 அன்று வழங்கப் பட்டது. மேலும், தன் னார்வ அமைப்புகள் மூலம் கூடுதலாக ரூபாய் 15 இலட் சம் நிதியுதவியும் வழங்கப் பட்டது.

மேலும், சென்னை கோவளம், மீனவ கிராமத் தைச் சார்ந்த ராஜசேகர் பச்சை (வயது 28) எவ ரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார். இந்திய அலைசறுக்கு வீர ரான (surfing player) இவர் சென்னைபடூர் இந்துஸ் தான் கலை மற்றும் அறிவி யல் கல்லூரியில் இளங்கலை கணினி (B.C.A) பட்டப்ப டிப்பை முடித்துள்ளார். இவர் மே 19ஆம் தேதி காலை 5.30 மணிக்கு எவ ரெஸ்ட் சிகரத்தை அடைந் தார்.

இந்நிகழ்ச்சியில் இளை ஞர் நலன் மற்றும் விளை யாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலா ளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளை யாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செய லாளர் ஜெ.மேகநாத ரெட்டி, அலைசறுக்கு சங்க மாநில துணைத் தலைவர் வீரா, தமிழ்நாடு விளை யாட்டு மேம்பாட்டு ஆணைய துணை மேலாளர் திருமதி மெரிசி ரெஜினா, முதுநிலை மண்டல மேலா ளர் திருமதி சுஜாதா ஆகி யோர் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்டம்

திருவாடானை ஒன்றியப் பகுதிகளில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் நேரில் ஆய்வு!

இராமநாதபுரம், ஜூன் 1 -

இராமநாதபுரம் மாவட் டம் திருவாடானை ஊராட்சி ஒன்றியப்பகுதிக ளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்ட பணிகளை பிற்படுத்த ப் பட்டோர் நலத்துறை மற் றும் கதர் கிராமத் தொழில் கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், பார்வை யிட்டு ஆய்வு மேற்கொண் டார்.

இராமநாதபுரம் மாவட் டம், திருவாடானை ஊராட்சி ஒன்றியத்திற் குட்பட்ட நகரிக்காத்தான், நம்புதாளை மற்றும் பாண் டுகுடி ஆகிய பகுதிகளில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் மேற்கொள்ளப் பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித்திட்ட பணி களை மாவட்ட ஆட்சித்த லைவர் பி.விஷ்ணு சந்திரன் முன்னிலையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரி யத்துறை அமைச்சர் ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் பார்வையிட்டு ஆய்வு செய் தார்.

அப்போது அவர் கூறி யது வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்க ளின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி என அறிந்து கிரா மப்புற மக்களின் வாழ்வா தாரம் மேன்மை அடைந்தி டும் வகையில் பல எண்ணற்ற திட்டங்களை அறிவித்து அதனை செயல் படுத்தி வருகிறார்கள். குறிப்பாக குடிநீர், போக்கு வரத்து, மின் விநியோகம், நீர்ப்பாசனம், சாலை வசதி ஆகியவைகள் எந்த தடை யுமின்றி மக்களுக்கு கிடைத்திட தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக நேற்றைய தினம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் இராமநா தபுரம் மாவட்டத்தில் 2 நக ராட்சிகள், 5 பேரூராட்சி கள், 11 ஊராட்சி ஒன்றி யங்களில் உள்ள 2306 ஊரக குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.2819.78 கோடி மதிப்பீட் டில் புதிய காவிரி கூட்டு குடிநீர் திட்டத்திற்கான பணிகள் துவங்கப்ப ட்டுள் ளது. இதன் மூலம் அனைத்து கிராமத்திற்கும் தண்ணீர் தடையின்றி கிடைத்திடும் வகையில் இத்திட்டம் துவக்கி வைக் கப்பட்டுள்ளது. இந்த திட் டத்தின் மூலம் அனைத்து கிராமத்திற்கும் குடிநீர் சீராக கிடைத்திடும் வகை யில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தற்பொழுது தண்ணீர் சீராக கிடைக்கப்பெறாமல் உள்ள பகுதிகளை கண்ட றிந்து லாரிகளில் தண் ணீரை கொண்டு சென்று குடிநீர் விநியோகம் செய்ய தொடர்புடைய அலுவலர் களுக்கு அறிவுறுத்தப்பட் டுள்ளது. மேலும் பொது மக்கள் வைத்திடும் கோரிக்கைகளை உடனுக் குடன் நிறைவேற்றும் வகையில் அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பொதுமக்களின் தேவையை உணர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிகளை மேற்கொண்டு வருவ தோடு மட்டுமின்றி அர சின் பல்வேறு திட்டங் களை பொதுமக்களின் வளர்ச்சிக்காக செயல்ப டுத்தி வருகிறார்கள். எனவே பொதுமக்கள் தமி ழக அரசின் சார்பில் செயல் படுத்தப்பட்டு வரும் திட் டங்களை பெற்று பயன்பெற வேண்டும் என பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரி யத்துறை அமைச்சர் ஆர். எஸ்.ராஜகண்ணப்பன் தெரிவித்தார்.

முன்னதாக, திருவா டானை ஊராட்சி ஒன்றி யம், நகரிக்காத்தான் பகுதி யில், தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டுத்திட் டத்தின் கீழ் ரூ.34.19 லட் சம் மதிப்பீட்டில், திருவா டானை ஓரியூர் சாலை முதல் நகரிக்காத்தான் உடையார் குடியிருப்பு சாலை பணிகள் நடைபெ றுவதையும், 15வது நிதிக் குழு திட்டத்தின்கீழ் ரூ.30.00 லட்சம் மதிப்பீட் டில் நகரிக்காத்தான் கிரா மத்தில் துணை சுகாதார நிலையத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரு வதையும்,

ஒருங்கிணைந்த பள்ளிக் கட்டிடம் கட்டுதல் திட் டத்தின் கீழ் ரூ.28.03 லட் சம் மதிப்பீட்டில் நம்புதாளை ஊராட்சி ஒன றிய துவக்கப்பள்ளி வளா கத்தில் புதிய வகுப்பறைக் கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதை யும், தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.34.40 வட்சம் மதிப்பீட்டில் இ. சி.ஆர் சாலை முதல் கடற் கரை முருகன் கோவில் சாலை வரை சாலை அமைக்கும் பணிகள் நடை பெற்று வருவதையும்,

திணையத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் புதிய பள்ளி வகுப்பறைக்கட்டிடம் கட் டும் திட்டத்தின் கீழ் ரூ.28.75 வட்சம் மதிப்பீட் டில் 2 வகுப்பறை கட்டி டம் கொண்ட கட்டிடம் கட்டுதல் பணிகள் நடை பெற்று வருவதையும் பிற்ப டுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு நடைபெற்று வரும் பணி களை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன் பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் எனவும், மேலும் திருவாடானை ஊராட்சி ஒன்றியப்பகுதிக ளில் நடைபெறும் வளர்ச் சித்திட்ட பணிகளை விரை வாக உரிய காலத்திற்குள் முடித்திடவேண்டும் என வும் தொடர்புடைய அலு வலர்களை அறிவுறுத் தினார்.

இந்த ஆய்வின்போது கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கே.ஜே.பிர வின் குமார், திருவாடானை ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் முகம்மது முக் தார், வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேஸ்வரி , திருவாடானை வட்டாட் சியர் கார்த்திகேயன் , உதவி பொறியாளர்கள் செல்வக்குமார், பாலகு மார், தி.வேதவள்ளி, ஜெயந்தி உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனி ருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

நெல்லை கிழக்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடுவீர்!

மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, ஜூன் 1 -

முத்தமிழ் அறிஞர் கலை ஞர் அவர்களின் நூற் றாண்டு தொடக்க விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட வேண்டும் என நெல்லை கிழக்கு மாவட்ட செயலா ளர் இரா. ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்தி ருப்பதாவது.

தமிழ்நாட்டில் தான் ஆட்சி செய்த போது ஏழை, எளிய, பிற்படுத்த ப் பட்ட தாழ்த்தப்பட்ட மக் கள், மகளிர், முதியோர், பள்ளி, கல்லூரிகளில் பயி லும், மாணவ, மாணவியர், இளைஞர்களுக்கு நாளும் நலத்திட்டங்களை தந்து ஆட்சி செய்து வந்த நாய கர், செம்மொழி காவலர் என்றும் கலைஞர் என போற்றப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களது நூற் றாண்டு தொடக்க ஆண்டு வருகின்ற ஜூன் 3 ஆகும்.

நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன் றிய, நகர, பேரூர், கிளை, வார்டு உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் முத்தமிழ் அறிஞர் கலை ஞர் அவர்களது திருவுருவ ப்படத்தினை அலங்கரித்து, கழக கொடியேற்றி இனிப் புகள் வழங்கி, ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள், மகளிர்,முதியோர், பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர், இளைஞர்கள் பயன் பெறும் வகையில் நலத்திட் டங்கள் வழங்கி நூற்றாண்டு நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திட வேண் டும்.

குறிப்பாக கழக முன் னோடிகளை கௌரவித்து அவர்கள் முன்னிலையில் நிகழ்ச்சிகள் சிறப்பாக ஏற் பாடு செய்திட வேண்டும்.

இந்நிகழ்ச்சிகளில் அந் தந்த பகுதிகளில் கழக நிர் வாகிகள் ஏற்பாடு செய்து, அதில் மாவட்ட கழக நிர் வாகிகள், தலைமை செயற் குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர் கள், மாவட்டப் பிரதி நிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், மாநில, மாவட்ட சார்பு அணிக ளின் நிர்வாகிகள் பங் கேற்று கலைஞர் அவர்க ளின் புகழை போற்றிட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2023–2024ஆம் ஆண்டிற்கான உறுதிமொழி குழு தலைவர், சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் (பண்ருட்டி) தலைமையில் சட்டமன்றகுழு உறுப்பினர்கள் கருணாநிதி(பல்லாவரம்), ரூபி ஆர்.மனோகரன் (நாங்குனேரி), எம்.கே. மோகன்(அண்ணா நகர்), பி.ராமலிங்கம்(நாமக்கல்), எஸ்.ஜெயக்குமார்(பெருந்துறை) ஆகியோர் மதுரை மாநகராட்சியின் மூலம் அம்ருத் திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஏற்கனவே இரண்டு கட்டங்களாக பணிகள் நடைபெற்று, தற்போது எஞ்சியுள்ள 57 வார்டுகளிலும் குடிநீர் விநியோக இணைப்புகள் வழங்க மூன்றாம் கட்டமாக நடைபெற்று வரும் குழாய் பதிக்கும் பணிகளை நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங் கீதா,மாநகராட்சி ஆணையர் சிம்ரன்ஜீத் சிங் உள்ளிட்டோர் உள்ளனர்

சுற்றுச்சூழல் பாதுகாப்பினை கருதி முதல்வரின் "மீண்டும் மஞ்சப்பை" விழிப்புணர்வு தமிழகம் எங்கும் வெகு விமர்சையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தானியங்கி மஞ்சப்பை வழங்கும் இயந்திரத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.